**இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் மற்றும் அதன் துணை கம்பனியும் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இன்போமேசன் கொமியூனிகேசன் டெக்னொலஜி ஏஜன்சி ஒப் சிறீ லங்கா (பிறைவேட்) லிமிடட் ‘‘கம்பனி’’ மற்றும் அதன் துணைக் கம்பனியின் ‘‘தொகுதி’’ 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த இலாப நட்ட கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளினை முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் குறிப்பிடத்தக்க தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்ானிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவிலும் மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் சம்பந்தமாக பார்க்கையில் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவனம் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதன் மீதான உள்ளகக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | சான்றளிக்கப்பட்ட வவுச்சர்களுக்கு மட்டுமே அனைத்துக் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும், மேலும் கொடுப்பனவு செய்யும் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக அனைத்து வவுச்சர்களும் சான்றளிக்கப்பட வேண்டும். இவ்வருடத்தில் சான்றளிக்கப்படாத 11 வவுச்சர்களுக்காக ரூபா. 33.8 மில்லியன் பெறுமதியான காசோலைகள் அச்சிடப்பட்டிருந்ததுடன், அக்ககாசோலைகளும் வவுச்சர்களும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | அச்செய்முறை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | சான்றளிக்கப்பட்ட வவுச்சர்களுக்கு மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| ஆ) | வழங்கப்பட்ட அனைத்துக் காசோலைகளின் செல்லுபடியாகும் காலமும், அவை வழங்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், கம்பனி அதற்கேற்ப செயல்படவில்லை. | உடன்பட்டுள்ளோம் | வழங்கப்பட்ட அனைத்துக் காசோலைகளின் செல்லுபடியாகும் காலமும், அவை வழங்கப்பட்ட திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குக் கட்டுப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | நியமங்களுடனான இணக்கமின்மைகள | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | குறிப்பிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கையின் தேசிய புலைமைச்சொத்து அலுவலகத்திடமிருந்து பெறப்பட்ட | கணக்கீட்டில் திருத்தம் செய்யும் முறை கையாளப்பட்டுள்ளதுடன், பொறுப்பைத் தீர்ப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் | செலுத்தப்பட வேண்டிய தொகையானது கணக்கீட்டுநியமத்திற்கு அமைவாகக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 32,363,150 தொகையானது, அச்செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாததால் 2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ஏனைய வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டதுடன், அதன் மூலம் திரண்ட நட்டமும் அத்தொகையினால் குறைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் தேசிய புலைமைச்சொத்து அலுவலகத்தினால் மீளளிப்பு கோரப்பட்டபோதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டுநியமம் 01 ற்கமைவாக எவ்வித ஒதுக்கும் செய்யப்படவில்லை. | பெறப்பட்டுள்ளது. | |
| ஆ) | இலங்கை கணக்கீட்டுநியமம் 01 பந்தி 32 ற்கு முரணாக, முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிக்கும் போது, ரூபா. 150,000 கொண்ட டெண்டர் கட்டண மீளளிப்பானது ரூபா. 32,000 கொண்ட டெண்டர் கட்டண வருமானத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக, முற்றடக்க வருமானக் கூற்றில் டெண்டர் கட்டண வருமானமானது மறைப் பெறுமதியைக் காட்டியுள்ளது. | முகாமையானது எதிர்கால நிதிக் கூற்றுக்களில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை முன்வைப்பது, தொடர்பில் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அறிக்கைப்படுத்தல் தேவைப்பாடுகள் முற்று முழுதாக நிறைவேற்றியிருப்பதை உறுதிசெய்யும். | வருமானங்களும் செலவுகளும் ஈடுசெய்யப்படக் கூடாது. |
| இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு முரணாக, துணை நிறுவனமான லங்கா அரசாங்க தகவல் கட்டமைப்பு நிறுவனத்திடமிருந்து (Lanka Government Information Infrastructure Company Limited) கைமாற்றப்பட்ட ரூபா. 5,219,499 பெறுமதியான நிலையான சொத்துக்கள், முறையான மதிப்பீடு இன்றி நிறுவனத்தின் கணக்கேடுகளில் பூச்சியப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்டிருந்தன. | அச்சொத்துக்கள் கட்டுப்பாட்டு மற்றும் கண்காணிப்பு நோக்கங்களுக்காகப் பௌதிக ரீதியாகப் பொறுப்பிலெடுக்கப்பட்டு (கையகப்படுத்தப்பட்டு), சொத்துப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டன. | நிலையான சொத்துக்கள் கணக்கீட்டு நியமமத்திற்கு அமைவாக மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கேற்பப் பதிவு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | வருடத்தில் இராஜினாமா செய்த 03 அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூபா. 995,337 பணிக்கொடைத் தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் எவ்வித ஒதுக்கமும் செய்யப்படவில்லை. இதன் காரணமாக, அவ்வாண்டிற்கான நிகர மிகையானது அதிகப்படுத்திக் காட்டப்பட்டுள்ளதுடன், பொறுப்புகள் அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. அத்துடன், மீளாய்வாண்டில் இரு அலுவலர்களுடன் தொடர்புடைய ரூபா. 1,598,700 பணிக்கொடை ஒதுக்கம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய காலப்பகுதியில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட உண்மையான சம்பளத்தின் அடிப்படையிலேயே பணிக்கொடைப் பொறுப்பும் கொடுப்பனவுகளும் கணக்கிடப்பட்டுள்ளன. | பணிக்கொடைப் பொறுப்பானது நிதிக்கூற்றுக்களில் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| ஆ) | இலங்கை டெலிகொம் லிமிடெட், இலங்கை அரசாங்க வலையமைப்புடன் (LGN) தொடர்புடைய சொத்துக்களின் உரிமையை 2022 டிசம்பர் 31 அன்று கம்பனிக்கு மாற்றியிருந்த போதிலும், 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் கம்பனிக்குச் சொந்தமான ரூபா. 238,819,392 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அச்சொத்துக்கள் இலங்கை அரசாங்க வலையமைப்பின் (LGN) சொத்துப் பதிவேடுகளில் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், பௌதிக ரீதியாகச் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களில் பயன்பாட்டில் உள்ளன. | நிறுவனத்திற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களும் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| இ) | டிஜிட்டல் பொருளாதார அமைச்சானது (Ministry of Digital Economy) நிறுவனத்தின் சார்பில் 2022 ஏப்ரல் 20 முதல் 2023 டிசம்பர் 31 வரையிலான மின்சார விநியோக சேவைகளுக்காக ரூபா. 9,992,787 தொகையையும், 2023 ஜனவரி 01 முதல் 2024 ஏப்ரல் 30 வரையிலான இணை-அமைவிட (Co-location) சேவைகளுக்காக ரூபா. 15,219,904 தொகையையும் இலங்கை டெலிகொம் லிமிடெட் நிறுவனத்திற்கு நேரடியாகச் செலுத்தியிருந்தது. இத்தொகைகள் கம்பனியினால் பொறுப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மீளாய்வாண்டில் கம்பனியின் செலவினமாகவே கணக்குக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | பொறுப்புக்களாக இனங்காணப்படாத செலவினங்கள் கணக்குக் காட்டப்படக்கூடாது |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | சுகாதாரச் செயற்திட்டத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட நான்கு ஊழியர்களின் சம்பளம் சுகாதார அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்காக ரூபா. 2,193,600 தொகையைக் கொண்ட பணிக்கொடை ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக, 2024 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் பணிக்கொடைப் பொறுப்புக்கள் அத்தொகையினால் அதிகப்படுத்திக் காட்டப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டின் செலவினமானது ரூபா. 2,913,600 இனால் அதிகப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. | LKAS 19 இற்கு அமைவாகப் பணிக்கொடை ஒதுக்கீடு இனங்காணப்பட்டுள்ளது. | பணிக்கொடை ஒதுக்கீடானது சரியாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.4 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடமொன்றில் நிறுவப்பட்ட ரூபா. 66,725,736 பெறுமதியான மின்சாரப் பொருத்தல்கள் மற்றும் சாதனங்களுக்கான தேய்மானமானது, எஞ்சிய குத்தகைக்காலம், மின்சாரப் பொருத்தல்களின் தன்மை மற்றும் நிறுவனத்தின் தொடர்ந்திங்கும் தன்மை ஆகியவற்றை கருக்கில் கொள்ளாமல், இலங்கை கணக்கீட்டுநியமம் 16 க்கு முரணாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, மீளாய்வாண்டின் இறுதியில் மின்சாரப் பொருத்தல்கள் மற்றும் சாதனங்களின் தேறிய புத்தகப் பெறுமதி (net book value) ரூபா. 11,120,956 இனால் மிகைப்படுத்தப்பட்டுள்ளது. | சூழ்நிலைகள் மாறினால் அல்லது கலைப்பு நடவடிக்கை (winding-up process) முறைப்படி தொடங்கப்பட்டால், முகாமையானது இந்தச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மறுபரிசீலனை செய்து, தேவையான மாற்றங்களை எதிர்கால அடிப்படையில் (prospectively) மேற்காள்ளும். | கணக்கீட்டுத் நியமத்தின்படி குத்தகைக்காலத்தைக் கருத்தில் கொண்டு தேய்மானம் கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.5 கம்பனியின் தொடர்ந்திங்கும் தன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | நிதிக்கூற்றுகளின்படி, பரிசீலனைக்குட்பட்ட ஆண்டிற்கான மிகை ரூபா. 73,005,158 ஆகவும் திரண்ட நட்டம் ரூபா. 64,897,846 ஆகவும் இருந்தது. மேலும், 2024 டிசம்பர் 31 நிலவரப்படி நிறுவனத்தின் எதிர்மறை நிகரப் | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | இடரைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பெறுமதி ரூபா. 64,897,826 ஆக இருந்தது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| இலங்கை அவசர கணனி பதிலளிப்பு மன்றத்திற்கு (இலங்கை சேர்ட்) செலுத்த வேண்டிய ரூபா 40,215,928 தொகை 2017 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டிறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | இரு கம்பனியின் கணக்குப் புத்தகங்களிலிருந்தும் நிலுவைகளைப் பதிவழிக்குமாறு (write off) அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. | இப்பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| அ) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம், பிரிவு 47 மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிச் சட்டம், பிரிவு 44 | ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி (ETF) பங்களிப்புகளைக் கணக்கிடுவதில் சேர்க்கத் தகுதியில்லாத கைபேசிக் கொடுப்பனவு மற்றும் பிரயாணக் கொடுப்பனவு ஆகியவற்றை நிறுவனம் சேர்த்துள்ளது. இதன் விளைவாக, 2021 - 2024 காலப்பகுதியில் நிறுவனத்தால் ஊழியர் சேமலாப நிதிக்காக ரூபா. 3,818,645 மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிக்காக ரூபா. 572,797 அதிகமாகக் | இக்கொடுப்பனவானது ஊழியரின் வழக்கமான வருமானத்தின் ஒரு பகுதியாக அமைகிறது. | ஊழியர் சேமலாப நிதியைக் (EPF) கணக்கிடும் போது, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் கணக்கில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டுள்ளது. | | |
| ஆ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2017 ஜுன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை, பந்தி 10 | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கம்பனியினால் தலைமைக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்குச் (Comptroller General's Office) சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனி நடப்பாண்டு வரையிலான நிதியல்லாத சொத்துக்களுக்கான சொத்து மதிப்பாய்வு அறிக்கையை (board of survey report) தலைமைக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்துள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி அனைத்து சொத்து விவரங்களும் தலைமைக்கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு அறிக்கை செய்யப்பட வேண்டும் |
| இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கை செயற்பாட்டு கையேடு | | | |
| | பந்தி இலக்கம் 2.3 | அனைத்து அரசாங்க தொழில் முயற்சியிகளும் (SOEs) அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தமக்கே உரிய நிர்வாக மற்றும் நிதி தொடர்பான கையேடுகளை ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டும் எனக் கோரப்பட்டிருந்த போதிலும், கம்பனி அதற்கேற்ப செயற்பட்டிருக்கவில்லை. | இயக்குனர் சபையினால் (BODs) அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதிக்கையேடுகள் உள்ளது. | செயற்பாட்டு கையேட்டின்படி (operational manual), கம்பனியின் சொந்த நிர்வாக மற்றும் நிதிக்கையேடுக்கான அங்கீகாரம் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டும். |
| | பந்தி இலக்கம் 3.8 | அரசாங்க தொழில் முயற்சியில் ஊழியர்களுக்கு தொடர்பாடல் வசதிகளானது காலத்துக்கு காலம் வழங்கப்பட்ட | ஏற்றுக்கொள்ளப்படுகிறது, அரசாங்க தொழில் முயற்சியிகளின் வழிகாட்டல்களின் (SOE guidelines) இணைப்பு A இன் படி, ICTA இன் இயக்குனர் சபைக்கு | கம்பனிகள் இணைப்பு A இல் உள்ளடக்கியுள்ள போதிலும், தொடர்பாடல் வசதிகள் PED சுற்றறிக்கைகளின்படியே வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்க சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனி சுற்றறிக்கை ஏற்பாடு இல்லாது செயற்திட்ட உத்தியோகத்தர்/ செயற்திட்ட உதவியாளர்கள் மற்றும் சாரதி பதவியணியினர்களுக்கும் தொலை பேசி படியாக ரூபா 1,664,466 தொகையினை செலுத்தியிருந்தது. | அதிகாரம் உள்ளது. | |
| பந்தி இலக்கம் 6.7 | இலங்கை அரசாங்க வலையமைப்பு (LGN) 2.0 திட்டத்தின் கீழ் உள்ள ரூபா. 238,819,392 பெறுமதியான சொத்துக்கள் வருடாந்த சொத்து மதிப்பாய்வுச் சபையினால் (board of survey) சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது, மேலும் அச்சொத்துக்கள் உரிய நிறுவனங்களுக்குக் மாற்றப்பட்டுள்ளன. | அனைத்து சொத்துக்களும் சொத்து மதிப்பாய்வுச் சபையினால் (board of survey) வருடாந்தம் சரிபார்க்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் செயற்பாட்டு விளைவுகள் முறையே ரூபா 73,005,158 மற்றும் 28,801,381 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான கம்பனியினதும் குழுமத்தினதும் பற்றாக்குறை மற்றும் மிகை முறையே ரூபா 4,120,754 மற்றும் ரூபா 957,999 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 77,125,912 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கான முக்கிய காரணம், லங்கா கவர்ன்மென்ட் இன்போர்மேஷன் இன்பிராஸ்ட்ரக்சர் (பிரைவேட்) லிமிட்டெட் (Lanka Government Information Infrastructure (Pvt) Ltd) நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையான ரூபா. 44,001,286 பதிவழித்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **LGN 2.0** செயற்திட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் உள்ள உபகரணங்கள்/கூறுகள் காணாமல் போயிருந்தன, மேலும் காணாமல் போன பொருட்களின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா. 5,847,912 ஆகும். இந்த இழப்பிற்குப் பொறுப்பான நபரைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டபடி முதலாவது இடத்தில் உபகரணங்கள் காணாமல் போயுள்ளது, ஏனைய இரண்டு இடங்கள் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளது, மற்றும் அவ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. | இழப்பிற்குப் பொறுப்பான நபர்களைக் கண்டறிவதற்கும், அந்த இழப்பை அறவீடு செய்வதற்கும் (மீட்டெடுப்பதற்கும்) நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | பகுதி நேர ஒப்பந்த அடிப்படையில் பெறுகை நிபுணராக (Procurement Specialist) சேர்க்கப்பட்ட, 05 ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை பூர்த்தி செய்யாத அதிகாரிக்கு 07 ஆண்டுகளுக்காக ரூபா. 451,500 பணிக்கொடையாக (gratuity) செலுத்தப்பட்டுள்ளது. | சீராக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது | ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியான சேவையை பூர்த்தி செய்த அதிகாரிகளுக்கு மட்டுமே பணிக்கொடை (gratuity) வழங்கப்பட வேண்டும். |
| ஆ) | "e-Library" செயற்திட்டத்தைச் செயல்படுத்தாமல், 2019 ஆம் ஆண்டிற்கான நிதியறிக்கைகளைத் தயாரிக்கும் போது, அச்செயற்திட்டத்தை அமல்படுத்துவதற்காக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையிடமிருந்து (Bill and Melinda Gates Foundation) பெறப்பட்ட ரூபா. 121,582,863 தொகை நிறுவனத்தின் வருமானத்தில் ஏனைய வருமானமாக சேர்க்கப்பட்டது. | குறித்த விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | செயற்திட்டங்களுக்காகப் பெறப்படும் நிதிகள் அத்தகைய செயற்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கே பயன்படுத்தப்பட வேண்டும். |
| இ) | இயக்கநர்கள் சபையின் பிரதான தீர்மானத்திற்கு மாறாக 30 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகளால், அச்சம்பள திருத்தங்கள் | 2022 முதல் 2024 வரையிலான அதிகப்படியான சம்பளக் கொடுப்பனவைச் சரிசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | அதிகப்படியாகச் செலுத்தப்பட்ட சம்பளம் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லுபடியற்றவை என சட்டமா அதிபரின் 2023 செப்டம்பர் 14 ஆம் திகதிய E/112/2023/ICTA ஆம் இலக்கக் கடிதம் மூலம் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, கம்பனி 2024 பெப்ரவரி வரை மேலதிகமாக செலுத்திய ரூபா. 8,123,167 தொகை மேலதிக சம்பளக்கெடுப்பனவாக உள்ளது. | | |
| ஈ) | நிறுவனச் சட்டத்தின் 242 ஆம் பிரிவுக்கு இணங்க, துணை நிறுவனமான லங்கா கவர்ன்மென்ட் இன்போர்மேஷன் இன்ப்ராஸ்ட்ரக்சர் (பிரைவேட்) லிமிட்டெட் (Lanka Government Information Infrastructure (Pvt) Limited) உடன் இணைவதற்கு, 2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குநர் சபை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 டிசம்பர் 31 வரை குறிப்பிடப்பட்ட பணி நிறைவு செய்யப்படவில்லை. | இணைப்பிற்குப் பதிலாக நிறுவனத்தைப் பதிவிலிருந்து நீக்குவதற்கு (strike off) இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது. | இயக்குநர் சபையின் தீர்மானத்திற்கு இணங்க, துணை நிறுவனத்தை மூடும் நடவடிக்கை விரைவுபடுத்தப்பட வேண்டும் |
| உ) | 2023 டிசம்பர் 18 ஆம் திகதிய 23/2443/630/009 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் 3.5 ஆம் பந்திக்கமைய, கம்பனியைக் கலைப்பதற்கான அதிகாரம் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 3.6 ஆம் பந்திக்கமைய, நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு (Project Management Unit) மாற்றப்பட வேண்டும் எனவும், கம்பனியின் அகவிதிகள் மற்றும் 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் தொடர்பு தொழில்நுட்பச் சட்டத்தின் விதிகளுக்கமைய, 2023 டிசம்பர் 18 அன்று அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. அவ்வாறான | நடைபெற்று வரும் அரசாங்க வேலைத்திட்டங்களை நிறுவனம் தொடர்ந்து இயக்கிச் செயல்படுத்துவதாகவும், இந்த பொறுப்புகளை ஏற்பதற்கு மாற்றீடான நிறுவனப் பொறிமுறையொன்று நிறுவுவப்படும். | கம்பனியைக் கலைப்பதற்கான அதிகாரம் செயலாளருக்குப் அளிக்கப்பட்டிருப்பதுடன், கம்பனியினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் அமைச்சின் செயற்திட்ட முகாமைத்துவ அலகுக்கு (Project Management Unit) மாற்றப்பட வேண்டும். |

நடவடிக்கைகளை எடுக்காமல், நிறுவனம் தொடர்ந்து இயங்கி வந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| லங்கா அரசாங்க வலையமைப்பு (Lanka Government Network - LGN) 2017 ஆம் ஆண்டில் 860 அரச நிறுவனங்களை இணைத்து ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், டுபுே 2.0 இன் மாதாந்த சராசரி அலைவரிசை பயன்பாட்டு அட்டவணையின்படி 2024 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் 817 செயலில் உள்ள தளங்கள் (active sites) மட்டுமே இருந்தன. 29 நிறுவனங்கள் தொடர்பான விவரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், தொழில்நுட்பப் பிரச்சினைகள் காரணமாக 31 தளங்கள் கணக்கில் கொள்ளப்படாததுடன், 25 தளங்கள் பூஜ்ஜிய மாதாந்த சராசரி அலைவரிசை பயன்பாட்டைப் பதிவுசெய்திருந்தன. | அலைவரிசை பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காகச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு பேசப்பட்டது. சேவை வழங்குநர் தொழில்நுட்பப் பிரச்சினைகளைச் சரிசெய்துள்ளார். | பயன்பாட்டை உச்சப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம் பொறி உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், 235 ஊழியர்களுக்குப் போதுமானதாக வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடம் ஒன்று 42 ஊழியர்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால், 14,436 சதுர அடி பரப்பளவிற்காக ரூபா. 32,397,546 உத்தியோகபூர்வ வாடகை வீணாகச் செலுத்தப்பட்டுள்ளதுடன், ரூபா. 20,248,135 பெறுமதியுள்ள அலுவலக தளபாடங்களும் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | 2023 டிசம்பர் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட அமைச்சரவைக் கட்டளையானது செயற்பாடுகளை படிப்படியாக மூடுவதற்கு அறிவுறுத்தியது, இது ஊழியர்களின் விலகல் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைவடைந்தது. | சொத்துக்கள் அவற்றின் அதிகபட்ச ஆற்றலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிறுவக கட்டுப்பாடு தொடர்பான செயற்பாட்டு கையேட்டின் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க தொழில் முயற்சியின் ஒரு ஊழியர் அமைச்சிற்கு அல்லாது ஏனைய ஒரு நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாது விடுவிக்காதிருக்க வேண்டியதுடன் விடுவிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் எந்தப் படியும் செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் கம்பனி ஒரு உத்தியோகத்தரினை அவ்வாறான அங்கீகாரம் இல்லாது தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவித்திருந்ததுடன் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சம்பளம், தொலைபேசி கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்புகள் முறையே ரூபா.2,240,200, ரூபா.2,376,360 மற்றும் ரூபா.2,376,360 செலுத்தப்பட்டுள்ளன.. | கருத்தில் கொள்ளப்படுகிறது தொடர்புடைய அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார் | அலுவலர்களை அமைச்சிற்கு விடுவிப்பதற்கு முன்னர் பொருத்தமான அனுமதி பெறப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இல. 01/2021, திகதி 2021 நவம்பர் 16 இன் தொழிற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவின்படி, வரைவு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றபோதிலும், நிதிக்கூற்றுகள் 375 நாட்களுக்குப் பின்னரே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரை, வரைவு ஆண்டு கணக்குகள் ICTA இனால் பல முறை சமர்ப்பிக்கப்பட்டுத் திரும்பப் பெறப்பட்டிருந்தன. | நிதியாண்டு முடிவடைந்து அறுபது நாட்களுக்குள் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 குறிக்கோள்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | 2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கத் தகவலியல், தொடர்பாடல் தொழினுட்பச் சட்டத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகளாவன: இலங்கையில் தேசியக் கொள்கையொன்றை வகுப்பதற்கு உதவுதல், உத்திகள் மற்றும் திட்டங்களை வகுத்தல், மற்றும் தகவலியல், தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிதல் ஆகியவையாகும். இருப்பினும், அப்பணிகள் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுகளுக்கிடையிலான குழுவின்மை, கொவிட்-19 பெருந்தொற்று, அதனைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடி, செலவினக் குறைப்புகள், ஆட்சேர்ப்பு நியமனக் கட்டுப்பாடுகள் மற்றும் அதிகளவிலான ஊழியர் விலகல் காரணமாக இப்பணிகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. | நிறுவனம் தனது இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| ஆ) | 2023 டிசம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில், 2020-2024 வரையான மூலோபாயத் திட்டத்தைக் கைவிடுவதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. மேலும், செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தின்படி, மதிப்பாய்வுக்குட்பட்ட ஆண்டில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா.357.88 மில்லியன் செலவிலான 06 செயற்திட்டங்களின் பௌதிக முன்னேற்றமானது 23 சதவீதம் முதல் 55 சதவீதம் வரையிலான குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | விடயம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.3 உள்ளக கணக்காய்வு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| அ) | உள்ளக கணக்காய்வாளர் வெற்றிடம் 2023 பெப்ரவரி மாதம் முதல் 2025 டிசம்பர் 31 வரை ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படாமல் இருந்துள்ளது. | 2026 ஜனவரி 12 ஆம் திகதி முதல் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். | ஒரு உள்ளக கணக்காய்வாளர் தொடர்ச்சியாகச் சேவையில் இருக்க வேண்டும். |
| ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதியிட்ட 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கார்ப்பரேட் ஆளுகை பற்றிய வழிகாட்டுதல்களின் பிரிவு 4.2 இன் படி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு குழுக்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும் என்ற போதிலும், 2024 ஆம் ஆண்டில் 2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டுள்ளன. | இயக்குநர்கள் சபையின் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட பல மாற்றங்கள் காரணமாக, அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். |